விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 230 வள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 21 வியாழக்கிழமை (06.08.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முன்னாள் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்

### கைதாகி விளக்கமறியலில்

(கொழும்பு)
முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் எதிர்வரும் 18ஆம்

15ஆம் பக்கம் பார்க்க



## காண்பிய விரிப்புக் காணும் நல்லூரான் வடக்கு வாசல் வளைவு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருமையை மேலும் மெருகூட்டும் வகையில், ஆலயத்தின் வடக்குத் திசையில் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசலான 'நல்லூரான்வடக்கு வாசல்வளைவு' ஆடிக் கார்த்திகை நன்னாளான




15ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற வானிலை 16 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)
சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்

02ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியில்
## 8 என்புக்கூடுகள் புதிதாக அடையாளம்



15ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபகரிப்பு

### இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தெரிவிப்பு



(கொழும்பு)
தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் அரசாங்கத்தினால் அபகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியிடம் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தலை
## விரைவில் நடத்துமாறு இந்தியா வலியுறுத்தும்
### இந்திய வெளியுறவுச் செயலாளர்

(கொழும்பு)
மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்துமாறு அநுர அரசை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்தியா இடையே
## 350 மில்லியன் அமெரிக்க டொலர் ஒப்பந்தங்கள் பரிமாற்றம்



(கொழும்பு)
டித்வா' சூறாவளியைத் தொடர்ந்து இந்தியாவினால் வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் புனரமைப்புத் தொகுப்பின் ஒரு பகுதியாக, 350 மில்லியன் அமெரிக்க டொலருக்கான இந்திய ரூபாய் மதிப்பிலான கடன் கோடுகளுக்கான ஒப்பந்தங்கள்

16ஆம் பக்கம் பார்க்க

## அராலி வடக்குப் பகுதியில் வீடு புகுந்து கொள்ளை
### மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் துணிகரம்

(யாழ்ப்பாணம்)
அராலி வடக்குப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் துணிகரக் கொள்ளைச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
நேற்று முன் தினம் இரவு மின்சாரம் தடைப்பட்டபோது நால்வர்கொண்ட கும்பல் ஒன்று அராலி

15ஆம் பக்கம் பார்க்க

## குட்டிமணி, தங்கத்துரைக்கு
## சிலை அமைப்பதற்கான தற்காலிகத் தடை நீக்கம்


(யாழ்ப்பாணம்)
குட்டிமணி, தங்கத்துரைக்கு சிலை அமைப்பதற்கான தற்காலிகத் தடை நீதிமன்றத்தால் நீக்கப்பட்டுள்ளது.
வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருக்கு வல்வெட்டித்துறையில் சிலை

15ஆம் பக்கம் பார்க்க

## விமலுக்கு எதிராக
## விரைவில் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, அசங்க நவரத்ன உள்ளிட்ட ஆறு

02ஆம் பக்கம் பார்க்க



இலங்கை விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது..

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின்...

இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியுடன் வடக்கு -கிழக்கை பிரதிநித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, தமிழர் தாயகப் பிரதேசத்தில் இன்னமும் கைவிடப்படாமல் படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கும் நிலங்கள் பற்றிய விபரங்கள் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள், மக்களால் கைவிடப்பட்டவை. என்ற பொருள்படக் கருத்துக்கள் கூறப்படுதல் குறித்தும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இந்திய வெளியுறவுச் செயலாளர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்க் கட்சி தலைவர்கள்,

தேர்தலை இப்போதைக்கு நடத்தும் ஆர்வம் ஜனாதிபதிக்கோ அரசாங்கதிற்கோ இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் மக்களால் கைவிடப்பட்டவை என்ற பொருள்படத் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

சம்பந்தப்பட்ட காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து நீண்டகாலமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் அந்த மக்கள் வேறு இடமில்லாமல் இடம்பெயர்ந்து இருக்கின்றார்கள். சிலர் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். ஆனால் அதனைக் காரணம் காட்டி அவை கைவிடப்பட்ட காணிகள் என்று கூறுவது அர்த்தமற்றது எனத் தமிழ்த் தலைவர்கள் விளக்கமளித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ,

மக்கள் குடியிருக்காத தமிழர் தாயக நிலங்களைக் கபளீகரம் செய்ய கொழும்பு ஆட்சிப்பீடம் தீவிரமாக முனைகின்றது. ஏற்கெனவே அரசு அத்தகைய முயற்சியை மேற்கொண்ட போது இனி அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறாது என்று பிரதமர் வாக்குறுதி அளித்த போதிலும் அதனை மீறி நிலத்தைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டினார். சந்தர்ப்பவசமாக சுமந்திரன் தாக்கல் செய்த வழக்கின் மூலமே அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் காணிகளை அவர்களிடமே கையளிக்கப்பட்ட வேண்டும் என்பது தங்களுடைய அரசின் தேசிய கொள்கை என்று ஜனாதிபதி அறிவித்த, மறுநாள் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்க மாட்டோம் என்று தெரிவிக்கிறார் என அரசாங்கத்தின் முரண்பாடான நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதனும் கருத்துக்களை வெளியிட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சாணக்கியன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் ப.சத்தியலிங்கம், கவீந்திரன் கோடீஸ்வரன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட கீழ்வரும் இடங்களில் தொலைத்தொடர்பு கம்பங்கள் (Lamp Pole -30M) அமைப்பதற்கான அனுமதிக்கு கோரிக்கை சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கோரிக்கையினை பரிசீலிப்பதற்கு ஏதுவாக அச்சுற்றாடலில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களிடமிருந்து அபிப்பிராயங்கள் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், மேற்படி தொலைத்தொடர்பு கம்பங்கள் அமைப்பது தொடர்பான பொதுமக்களது அபிப்பிராயங்களை **"தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்"** எனும் முகவரிக்கு **18.08.2026 ஆந் திகதிக்கு முன்னர்** எழுத்துமூலம் சமர்ப்பிக்கலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

| இல | அமைவிடம் | கிராமத்தின் பெயர் | கிராம சேவையாளர் பிரிவு |
|---|---|---|---|
| தொலைத்தொடர்புக் கம்பம் - 01 | வாதரவத்தை விக்னேஸ்வரா சனசமூக நிலைய வளாகம், வாதரவத்தை | வாதரவத்தை | J/280 |
| தொலைத்தொடர்புக் கம்பம் - 02 | இ.சுதாகரன், சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு | ஆவரங்கால் மேற்கு | J/277 |
| தொலைத்தொடர்புக் கம்பம் - 03 | பா.சிறிகெங்கபாலா, பாலாமில், உரும்பிராய் | உரும்பிராய் வடக்கு | J/266 |

**தியாகராஜா நிரோஷ்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**

(8319) 04.08.2026

## விரைவில்...

அரசியல் பிரமுகர்கள் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் ஊடகங்களில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை கொழும்பு கோட்டை நீதிவான் பசன் அமரசேன நேற்று திறந்த நீதிமன்றத்தில் அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணையையும் தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சுரேஷ் சலே தொடர்பான விசாரணைகளையும் பாதிக்கும் வகையில் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக நீதிமன்றத்தை அவமதிக்கும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

குறித்த கருத்துகளை வெளியிட்டவர்களில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, சுகீஷ்வர பண்டார, அசங்க நவரத்ன மற்றும் மகிந்த பதிரண ஆகியோர் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இவ்வாறான கருத்துகள் தண்டனைக்குரிய குற்றமாக இருக்கக்கூடும் எனவும் 2026 ஆம் ஆண்டு ஜூன் 7ஆம் திகதி முதல் ஒளிபரப்பான சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளின் செம்மைப்படுத்தப்படாத காணொளிகளை ஊடக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தேய்பிறை அட்டமியும் ஆடிப் பரணி வழிபாடும்

கொக்குவில் தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய தேய்பிறை அட்டமி மற்றும் ஆடிப் பரணியை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை மாலை ஞானவைரவப்பெருமனுக்கு விசேட அபிஷேகங்கள், வசந்த மண்டப பூஜை சகஸ்ர நாம அர்ச்சனை என்பன இடம் பெற்றவுள்ளன.

இதன்போது பக்தர்கள் நெய் விளக்கேற்றி வழிபாடாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலசபையினர் தெரிவித்துள்ளனர். (ம-7)

## 16 ஆயிரத்துக்கு...

துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த நிலையம் வெளியிட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில், இந்த அனர்த்தத்தினால் 4,151 குடும்பங்களைச் சேர்ந்த 16,345 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு 1,912 குடும்பங்களைச் சேர்ந்த 7,288 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 மரணங்களும் பதிவாகியுள்ளன.

புத்தளம் மற்றும் கண்டி மாவட்டங்களில் தலா ஒரு மரணம் வீதம் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.


அதன்படி, சீரற்ற வானிலையால் இதுவரை மொத்தம் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

அனர்த்த நிலைமையினால் ஒரு வீடு முழுமையாகவும் 581 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 383 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து இந்தத் தரவுகள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆறுமுகம் நடராசா



தோற்றம் 1928.04.28 மறைவு 2016.07.27

எங்கள் அன்புத் தந்தை எம்மை விட்டுப் பிரிந்து 10 ஆண்டுகள்

"தாயாக தந்தையாக எம்மை
வளர்த்தெடுத்த அன்புத் தெய்வம்"
எங்கள் இதயம் நிறைந்த
எமது "ஜயா" வின் வெற்றிடம்
யாராலும் நிரப்பவே முடியாது.
ஐயாவின் ஆத்மா
சாந்தியடைய எமது குல தெய்வம்
வன்னிவிளாங்குளம் அம்மாளாச்சி
அருள் வேண்டி... **பிள்ளைகள்**

(C-6177)

தகவல் : ஆ.ந.ந.ராசா
076 8090 121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# NU InnoVista 2026

INNOVATE. INSPIRE. IMPACT.

SLIIT | NORTHERN UNI

EXPERIMENT. EXPERIENCE. EXCEL




## வடமாகாண பாடசாலை தரம் 9 - 13 மாணவர்களுக்கான புத்தாக்கப்போட்டி

பதிவுகளுக்கும் சமர்ப்பிப்பதற்குமான முடிவு திகதி
**18TH SEPTEMBER 2026**

## September இறுதி வாரத்தில் போட்டிகள் நடைபெறும்

### DISCOVERY LAB

மாணவர்களின் புதிய சிந்தனைகளின் முன்மாதிரிகளின் (Prototypes) தொழில்நுட்ப தீர்வுகளுக்கான போட்டி.

இது பின்வரும் கருப்பொருட்களை அடிப்படையாக கொண்ட தலைப்புகளை கொண்டிருக்க வேண்டும்.

**வகை 01** நிலையான மற்றும் பசுமை கணனியியல் (Sustainable & Green Computing)

**வகை 02** தகவல் தொழில்நுட்ப எதிர்காலம் (Future of IT)

**வகை 03** வணிகப் புதுமை (Business Innovation)

**பங்கேற்பாளர்கள்:**
குழு ஒன்றில் அதிகபட்சம் 3 மாணவர்கள்.

**அறிவுறுத்தல்:**
- தெரிவு செய்யப்படும் முதல் 30 படைப்புகள் Prototype/Demo - மூலம் NORTHERN UNI இல் காட்சிப்படுத்தப்படும்.

### VISION LENS

வட மாகாணத்தின் எதிர்காலத்தை புத்தாக்க சிந்தனைகளால் வடிவமைப்போம் (Shaping the Future of Northern Province Through Innovative Ideas) எனும் கருப்பொருளை வெளிப்படுத்தும் போட்டி. ஒரு மாணவர் ஒரு வகையில் மாத்திரம் கலந்துகொள்ளலாம்.

**வகை 01** சித்திரப் போட்டி – கற்பனை மற்றும் புத்தாக்க சிந்தனைகளை வரைதல் மூலம் வெளிப்படுத்துதல்.

**பங்கேற்பாளர்கள்:**
தனி போட்டியாளர்.

**வகை 02** புகைப்படம் & AI மூலம் உருவாக்கிய புகைப்படம் (Real Photography & AI-Generated Photography).

**பங்கேற்பாளர்கள்:**
குழு ஒன்றில் அதிகபட்சம் 2 மாணவர்கள்.

**அறிவுறுத்தல்:**
- புகைப்படப் போட்டிப் படைப்புகள் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி (10x15 inches/ 25.4x38.1 cm Size) சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (கிடைத்தோற்றம்/Landscape).

### CODE PARK

நிகழ் நிலை இடர்களுக்கு இலத்திரனியல் தீர்வுகளை காணும் மென்பொருள் உருவாக்கப் போட்டி. ஒரு மாணவர் ஒரு வகையில் மாத்திரம் கலந்துகொள்ளலாம்.

**வகை 01** No-Code Application Development.
(Digital solution for school matters)

**வகை 02** Low-Code Application Development.
(Technology for social impact and community development)

**பங்கேற்பாளர்கள்:**
குழு ஒன்றில் அதிகபட்சம் 3 மாணவர்கள்.

**அறிவுறுத்தல்:**
- No-Code அல்லது Low-Code தளத்தை பயன்படுத்தி செயலியை உருவாக்க வேண்டும்.
- நிகழ்வு நாளில் செயலியை வழங்கி விளக்க வேண்டும்.

### ஒவ்வொரு வகை போட்டிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்

- முதலாம் பரிசு : ரூபா 15,000
- இரண்டாம் பரிசு : ரூபா 10,000
- மூன்றாம் பரிசு : ரூபா 5,000

போட்டிகளில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

### பதிவு செய்யும் முறை

பதிவு செய்வதற்கும் தரவேற்றுவதற்கும் வழங்கப்பட்ட QR மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

**CALL NOW FOR MORE DETAILS**

**021 7534 807**

**076 141 2882**

northernuni.lk Nuinnovista@northernuni.com

**அறிவுறுத்தல்கள்:**
- போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளலாம்.
- ஒவ்வொரு 25 மாணவர்களுக்கும் ஒரு (1) குழுவைப் பதிவு செய்ய பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. உதாரணமாக, 100 மாணவர்கள் உள்ள ஒரு பாடசாலை அதிகபட்சமாக நான்கு (4) குழுக்களைப் பதிவு செய்யலாம். 25-க்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலை ஒரு (1) குழுவைப் பதிவு செய்ய தகுதியுடையவை


(C-6178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எல் நினோ தாக்கம்

# 2.5 இலட்சம் பேர் வரை பாதிக்கப்படும் அபாயம்!

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை



(கொழும்பு) ..........................

**எல் நினோ காலநிலை தாக்கத்துடன் வலுப்பெற்று வரும் தென்மேற்கு பருவமழை காரணமாக, இலங்கையில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் இருப்பதாக அரசாங்கத்தின் மதிப்பீடுகளை மேற்கோள்காட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதேவேளை, இந்த பருவமழை நிலைமையால் குறைந்த பட்சம் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் நேரடியாக பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், உருவாகி வரும் இந்த அனர்த்த நிலைமையை எதிர்கொள்வதற்காக இலங்கை அரசோ அல்லது வேறு எந்தத் தரப்போ இதுவரை சர்வதேச உதவியை கோரவில்லை என்றும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பருவகால வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் பிராந்திய காலநிலை கணிப்புகளின்படி, இந்த ஆண்டின் தென்மேற்கு பருவ மழைக் காலத்தில் நாட்டிற்கு வழக்கமான அளவுக்கு நெருக்கமான அல்லது அதைவிட சற்றுக் குறைவான மழை வீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழையின் அளவும் தீவிரமும் மாறுபடக்கூடும் என்பதால், வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட அனர்த்த அபாயங்கள் தொடர்பில் பொதுமக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



(ஹற்றன்)

கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மண்சரிவு, பாறைகள் சரிந்து விழுதல் மற்றும் மண் மேடுகள் இடிந்து விழுதல் போன்ற அபாயங்கள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி)

## அதிவேகப் பாதைகளில் பயணிப்போருக்கு ஆசனப் பட்டி கட்டாயம்

(கொழும்பு)

தொழில்துறை பங்காளர்களின் கோரிக்கைகளை அடுத்து, அதிவேகப் பாதை களில் இயங்கும் வாகனங்களில் ஆசனப் பட்டிகளை பொருத்துவதற்கு வாகன உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைக் காலத்தை அரசாங்கம் மூன்று மாதங்களுக்கு நீடித்துள்ளது.

மோட்டார் வாகனச் சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்ட 2011. ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மோட்டார் வாகனங்கள் (அதிவேகப் பாதைகள்) கட்டளையின் கீழ், அதிவேகப் பாதைகளில் பயணிக்கும் வாகனங்களில் உள்ள அனைத்து பயணி களுக்கும் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.ஆசனப்பட்டிகள் இல்லாத வாகனங்களில் அவற்றை மறுசீரமைத்துப் பொருத்துவதற்கு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆரம்ப சலுகைக் காலம் கடந்த ஜூன் 19 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

இந்த காலக்கெடுவை நீடிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு, 2026 ஜூன் 17 ஆம் திகதியிட்ட 2493/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அரசாங்கம் இக்கட்டளையில் திருத்தம் செய்து, சலுகைக் காலத்தை எதிர்வரும் செப்டெம்பர் 19 வரை நீடித்தது.

பாராளுமன்ற ஒப்புதலுக்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. (நி)

## நீதித்துறையில் புதிய சீர்திருத்தங்கள் மக்களுக்காகவே கொண்டு வரப்படுகிறது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

நாட்டில் நீதித்துறை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த நீண்ட காலமாக முன்மொழியப்பட்டு வந்த நிலையில் புதிய சீர்திருத்தங்களை மக்களுக்காகவே கொண்டு வரப்படுகிறது என சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து மகாநாயக்க தேரர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார மற்றும் ஊடக மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகா விகாரைகளுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தனர்.

அங்கு மகாநாயக்கத் தேரர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

நீதித்துறையில் மட்டுமன்றி, இன்னும் பல தொழில் துறைகளிலும் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கான கோரிக்கைகள் உள்ளன.

இது தொடர்பாகப் பொதுவாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டாலும், அரசியலமைப்பின்படி பொதுவாக்கெடுப்புக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், விவகாரம் தொடர்பில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டால், 99 சதவீதமான மக்கள் ஒரே மனதுடன் அதற்கு ஆதரவளிப்பார்கள்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படும் காலம், பணம் மற்றும் விரயங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் போது, தங்களது வழக்குகள் விரைவாக முடிவுக்கு வந்து நீதி கிடைக்க வேண்டும் என்பதையே மக்கள் விரும்புவார்கள் எனவும், அதற்கு அவர்கள் ஒரு போதும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அந்த இடைவெளியை நிரப்புவதற்காக தற்போதுள்ளவர்களின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதில் தவறு எதுவும் இல்லை.

மற்றொரு விஷயம் என்னவென்றால், நமது நாட்டின் மக்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளமை ஆய்வுகள் மூலம் வெளியாகியுள்ளது. பலரால் 60 முதல் 65 வயது வரை பணியாற்ற முடியும்.

நாட்டில் உள்ள விசேட வைத்தியர்களுக்கு 64 வயது வரை பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் உள்ளது. அந்த வாய்ப்பை நீதித்துறைக்கு மட்டுமன்றி மேலும் பல துறைகளுக்கும் வழங்கவே இந்த புதிய சீர்திருத்தங்கள் மூலம் எதிர்பார்க்கிறோம்.

கடந்தகால அரசாங்கங்கள் இந்தப் பணிகளைச் செய்யவில்லை. அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, பிரச்சினைகள் அதிகரிப்பதற்கே வழியமைத்தனர்.

இன்று கூச்சலிடுபவர்களின் ஆட்சியின் இறுதிக் காலத்தில், இந்த நாட்டின் சிறைச்சாலைகளில் இருக்க வேண்டிய கொள்ளளவை விட மூன்று மடங்கு அதிகமாக நிரம்பியிருந்தன.

அவர்கள் ஒரு புதிய சிறைச்சாலையையாவது கட்டினார்களா? ஒரு சட்டத்தையாவது மாற்றினார்களா? அவர்கள் செய்தது பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் விநியோகம் விரிவடைவதை அனுமதித்தது மட்டுமே.

நாங்கள் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை அடக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் போது சிறைச்சாலைகளில் சில சிக்கல்கள் எழுகின்றன.

புதிய சீர்திருத்தங்களின் மூலம் அந்த நெருக்கடிகளைக் குறைத்து, தற்போதைய காலத்திற்குப் பொருத்தமான ஒரு புதிய நீதித்துறை அமைப்பை நிறுவுவதையே நாங்கள் எதிர் பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

## நாட்டை வந்தடைந்தார் இந்திய வெளியுறவு செயலாளர்



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று புதன்கிழமை காலை இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி நாட்டை வந்தடைந்தார்.

அவரை விமான நிலையத்தில் வைத்து இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வரவேற்றார்.

விக்ரம் மிஸ்ரி அரச உயர்மட்டப் பிரதிநிதிகள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை முன்னெடுக்கவுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறைச்சாலைகள் அற்ற நாடு இதுவே எமது இலக்கு

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(கொழும்பு)

சிறைச்சாலைகளோ அல்லது குற்றவாளிகளோ இல்லாத ஒரு முன்மாதிரியான நாட்டை உருவாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய எதிர்பார்ப்பு அதற்கான முறையான வேலைத்திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப்படும் என்றும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போது இந்த நாடு பாரிய வங்குரோத்து நிலையில் காணப்பட்டது. குறிப்பாக மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாதவாறு பல நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.

ஆனால், நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் பல்வேறு நிவாரணங்களை வழங்கினோம். இதன் விளைவாக, தற்பொழுது கடற்றொழில் துறை மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மக்கள் எமக்கு இந்த ஆணையை வழங்கினார்கள். மக்களின் அந்த எதிர்பார்ப்பிற்கு அமைய, ஊழல்வாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் சட்டபூர்வமான வழியில் உறுதியாக முன்னெடுக்கப்படும்.

எமது ஆட்சியில் சிறைச்சாலைகளோ அல்லது குற்றவாளிகளோ இல்லாத நிலையை உருவாக்குவதே எமது பிரதான இலக்காகும். நாமும் சிறைவாசம் அனுபவித்தவர்கள் என்பதால், சிறையில் இருப்பதன் வேதனையும் வலியும் எமக்கும் நன்றாகவே தெரியும்.

எனவே, நாட்டில் குற்றச் செயல்கள் முற்றாக இல்லாத சூழலை உருவாக்குவோம்" என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் சுட்டிக்காட்டினார். (நி)

# 2030 இற்குள் அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கப்படும்-அமைச்சர் பிமல்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய அதிவேக நெடுஞ்சாலைக் கட்டமைப்பு, நான்கு முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களின் மூலம் 2030 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மேலும் 132 கிலோ மீற்றரால் விரிவாக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விரிவாக்கத்திற்கு பங்களிக்கும் நான்கு முன்னெடுப்புகளில், மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் 2 முக்கிய பிரிவுகளில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி கடவத்தையிலிருந்து மீரிகம வரையிலான 37 கிலோமீற்றர் நீளமுள்ள முதல் கட்டப் பகுதியும், பொத்துஹெரவிலிருந்து கலகெதர வரையிலான 33 கிலோமீற்றர் நீளமுள்ள மூன்றாம் கட்டப் பகுதியும் இதில் அடங்கும்.

மேலும் குருணாகல் - கலேவெல இடையிலான 38 கிலோமீற்றர் பிரிவின் பணிகள் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

233 பில்லியன் ரூபாய் செலவில் மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டம் 12 ஒப்பந்தப் பொதிகளாகப் பிரிக்கப்பட்டு, வெளிப்படையான விலை மனுக்கோரல் முறையின் கீழ் உள்நாட்டு கட்டுமான நிறுவனங்களைக் கொண்டு விரைவாகச் செயற்படுத்தப்படும்.

அத்துடன் 24 கிலோமீற்றர் நீளமுடைய இந்த திட்டத்தின் பணிகளும் இந்த ஆண்டிற்குள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

முதன்முறையாக, இந்த அதிவேக நெடுஞ்சாலைத் திட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் சொந்த உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ளன.

நாட்டின் நிலையான உட்கட்டமைப்பு வளர்ச்சியை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தின் மூலோபாய வளர்ச்சிக் கொள்கை சட்டத்திற்கு அமைவாக இந்த திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் டொலர் கடன்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் தொழிற்துறை அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கில், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களின் கீழ் இக்கடனைப் பெறுவதற்காக, 2026 ஜூன் 15ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முதற்கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வர்த்தக, முதலீட்டு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் முதல் உப திட்டத்திற்கான கடன் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன.

இக்கடன் ஒப்பந்தத்திற்குத் தேவையான சட்டபூர்வமான அனுமதிகளை இலங்கை மத்திய வங்கி மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவை ஏற்கனவே வழங்கி உறுதிப்படுத்தியுள்ளன.


அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, இக்கடனைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை தனது முழுமையான அங்கீகாரத்தை அளித்துள்ளது. (நி)

# 5 ஆண்டுகளில் மட்டும் 34,000 படை வீரர்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

கடந்த ஐந்து ஆண்டுகளில் முப்படைகளிலிருந்தும் 34 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வெளியேறியுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தரைப்படையிலிருந்து 31,088 பேரும், கடற்படையிலிருந்து 2,501 பேரும், விமானப்படையிலிருந்து 1,394 பேரும் வெளியேறியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)



# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம்

### புதிய பதிவு, அந்திரான் வீதி, வட்டாரம்-01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, அந்திரான் வீதியிலுள்ள ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டில் இதுவரை காலமும் பதியப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **நடராசா சரவணபவன்** ஆகியவர் குறித்த ஆதனமானது ஆரம்பத்தில் தனது பாட்டனாராகிய வயிரமுத்து கதிர்காமர் ஆகியவருக்கு உரியதாக இருந்து, பின்னர் அவர் காலஞ்செல்ல அவரது ஏகபுத்திரரான தனது தந்தையார் கதிர்காமர் நடராசா என்பவருக்கு பிதாவழி முதுசமாக வந்தது எனவும், அதன் பின்பு குறித்த தனது தந்தையாரான கதிர்காமர் நடராசா காலஞ்செல்ல அவருடைய ஏகவாரிசாகிய தனக்கு பிதாவழி முதுசமாக சொந்தமாக வந்தது எனவும், அதனைத் தொடர்ந்து குறித்த ஆதனம் தனது நீண்ட காலப் பிசகு தடையற்ற தொடர்ச்சியான ஆட்சியில் இருந்து வருகின்றது எனவும், குறித்த ஆதனம் வேறு எவ்வகையாகவும் பாரிக்கப்பட்டு அல்லது பராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் 3950/20.06.2003 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**தம்பையா மகள் றதினி** ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6332/02.02.2008 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நடராசா சரவணபவன்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சரவணபவன் ஹஜேந்திரனும் பெண் காந்திமதியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8799/03.07.2012/05.07.2012 இலக்க உறுதியால் குறித்த **தம்பையா மகள் றதினி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தவராசா நிஷாந்தன்** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7297/28.05.2017 இலக்க உறுதியால் குறித்த **சரவணபவன் ஹஜேந்திரனும் பெண் காந்திமதியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**தவராசா நிஷாந்தன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.


குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"கட்டுவிளானை"**
இறை: சித்தன்கேணி
வீஸ்தீரணம்: நில.பர 2
எல்லைகள்: **கிழக்கு** - வயிரமுத்து கதிர்காமரின் உரித்தாளருக்குமுரிய ஆதனம், **வடக்கு** -ஒழுங்கை, **மேற்கு** - இதன் மிகுதி ஆதனம், **தெற்கு** - சின்னத்துரை சுந்தரலிங்கத்திற்குரிய ஆதனம்

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தவராசா நிஷாந்தன் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் சிவலிங்கம் பிரதிஷ்டை



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நுவரெலியா மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்திற்கு 2இலட்சம் ரூபா பெறுமதியான கருங்கல்லிலான சிவலிங்கம் மற்றும் நந்தி என்பன ஆலய நிர்வாகத்திடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இதனை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (8-60)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கம்பர்மலை கலாவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் தலைவர் சிவலிங்கம் தயானந்தராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் கிருஸ்ணபிள்ளை ஜானகி கலந்து கொள்ளவுள்ளார். (8)

# 110 பானைகளில் பொங்கல்



(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 110 ஆண்டுகளை கடக்கும் வேளையில் நேற்றைய தினம் பாடசாலை வளாகத்தில் 110 பானைகளில் பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. (8)

# 'வேரிழந்த வாழ்க்கையும் தமிழர் பாதையும்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுவிட்சர்லாந்து நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றும் வின்ஸ்லோஸ் அன்ரனி எழுதிய "வேரிழந்த வாழ்க்கையும் தமிழர் பாதையும்" என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இல.286, பிரதான வீதி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வாழ்த்துரையை தகைசால் தமிழ்ப் பேராசிரியர் அ.சண்முகதாஸும், வெளியீட்டுரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸும், நயவுரையை மாங்குளம் நலநோம்பு மையத்தின் இயக்குநர் அருட்திரு செபமாலை அன்புராசா, அமதி அடிகளாரும் வழங்கவுள்ளனர்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (8)

# போசாக்கு மாதத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டையில் கண்காட்சி



(அராலி)

சுகாதார அமைச்சின் தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு "ஆரோக்கியமான சிற்றுண்டிகளை ஊக்குவிப்போம்" என்னும் தொனிப்பொருளிலான கண்காட்சியானது நேற்றைய தினம் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றது.

சங்கானை பொது சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தானிய உணவு வகைகள், கடல் சார் உணவு வகைகள் போன்ற பல்வேறு வகையான ஆரோக்கியம் சார்ந்த உணவு வகைகள் காட்சிப் படுத்தப்பட்டன.

குறித்த நிகழ்வில் தாய்மார் கழகத்தினர், சமூக மட்ட அமைப்பினர், வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினர், பொது சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(8-104)

# கிளிநொச்சி திருநகர் வீதி இருவழிச்சாலையாகப் புனரமைப்பு




(கிளிநொச்சி)

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய வீதிகளை புனரமைக்கும் செயற்றிட்டத்திற்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்டத்தில் பல முக்கிய வீதி புனரமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன் ஒரு பகுதியாக, கிளிநொச்சி A9 வீதியிலிருந்து மாவட்டச் செயலகம் வரையான திருநகர் பிரதான வீதி இருவழிச்சாலையாக புனரமைக்கப்படவுள்ளது.

மாவட்டச் செயலகத்திற்கான முக்கிய பாதையாக அமைந்துள்ள இவ்வீதி பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை பெறுநர்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் நோக்கில் நவீன தரத்துடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# பாடசாலை மாணவர்களுக்கான கண் பரிசோதனை முகாம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி வடக்கு வலய கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் மாணவர்களிற்கான கண் பரிசோதனை முகாம் முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கண் பரிசோதனை முகாமில் பளைக்கோட்டத்தை சேர்ந்த 150 மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்திருந்தனர்.

குறித்த கண் பரிசோதனை முகாமில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மலரவன் மற்றும் ஏனைய மருத்துவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிமனை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8)

# ஐஸ் போதை பொருட்களுடன் மூவர் கைது



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, 'ஐஸ்' போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்து தலா 150 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்களுக்கு போதைப்பொருள் விநியோகித்ததாக சந்தேகிக்கப்படும் பிரதான நபரிடமிருந்து 2,500 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப் பொருள் மற்றும் 14,700 ரூபாய் பணம் கைப்பற்றப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (8)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் புதிய தலைவராக ரோட்டேரியன் தேவரூபன் சரளா கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(படம்:- சுபேசன்)



வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத்தின் இரத்த தான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

(படம்:- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சட்டவிரோத இணையவழி வலைத்தளங்களை முடக்க உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் உரிமம் பெறாமல் இயங்கி வரும் அனைத்து சட்ட விரோத இணையவழி சூதாட்ட வலைத்தளங்களை உடனடியாக முடக்குமாறு தொலைபேசி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனைத்து தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, இணைய வழி சூதாட்டம், தொலைத் தொடர்பு மோசடிகள் மற்றும் அவை சார்ந்த குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுக்கள் பிற நாடுகளில் இருந்து இலங்கைக்கு இடம் பெயர்வதைத் தடுப்பதற்கான விசேட நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகள் பணமோசடி, கடத்தல்கள், மனித கடத்தல் மற்றும் சட்ட விரோத எல்லை தாண்டல் உள்ளிட்ட கடுமையான குற்றங்களுக்கு வழிவகுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# சஷீந்திர உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச உள்ளிட்ட மூவருக்கு எதிராக கையூட்டல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, எதிர்வரும் செப்டெம்பர் 28ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்னதாக பிணை நிபந்தனை பெற்றிருந்த சஷீந்திர ராஜபக்ச உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.



இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த நீதிபதி, வழக்கை மேலதிக விசாரணைக்காக 2026 செப்டெம்பர் 28ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்டார். (நி)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 4, நல்லூர் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 53/3 எனும் வரி மதிப்பீட்டு இலக்க ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் தர்மசங்கரி பெண் கனகநாயகி என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், தற்போது தமிழ்நாடு இந்தியாவில் வசிக்கும் விஜயசங்கரி தர்மசங்கரி தனது அற்றோனித் தத்துவக்காரரான இல.8/7, சிவன் தெற்கு ஒழுங்கை, திருநெல்வேலியைச் சேர்ந்த வீரசிங்கம் சகாதேவசங்கரி மூலம் தோன்றி 2013.04.06 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு V.T சிவலிங்கம் முகதாவில் 2893 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம், அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைச் சேர்ந்த தனது காலஞ்சென்ற தாயார் வீரசிங்கம் தர்மசங்கரி பெண் கனகநாயகிக்கு உரித்தாக இருந்தது என்றும் அவர் தனக்குரிய ஆதனங்களை தன்னை உட்பட தனது பல பிள்ளைகளுக்கு தானமாகப் பிரித்து வழங்கியிருந்தார் என்றும் குறித்த விபரங்கள் காணிப்பதிவகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், அவ்வகையில் மேற்படி ஆதனம் தனக்கு தானமாக வழங்கப்பட்ட தனக்குரித்தான ஆதனம் என்றும் குறிப்பிட்டு வெளிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண மாநகர சபை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, கிராமசேவகர் பிரிவு J/108, நல்லூர் கோவில் பற்று நல்லூர் இறை "சேருவந்தான் வளவும், கொள்ளை வளவும், அரசகுலசூரியன் வளவும்" நில.பர.12 குளி 16.47/56. ஆனால் ஆட்சிப்படியும் அளந்து கண்டபடியும் நில.பர. 13 குளி 3/16. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.N.V.சேயோன் அவர்களால் 23.08.1976 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 165 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 தொடக்கம் துண்டு 9 வரை சுட்டப்பட்டுள்ளதன் படி நிலப்பரப்பு 18 குளி 05 ஆகும். இது மீண்டும் நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களால் 18.12.2012 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 2276ஆம் இலக்க படத்தில் துண்டு 1 தொடக்கம் துண்டு 9 வரை சுட்டப்பட்டுள்ளதன் படி நிலப்பரப்பு 18 குளி 07.61. இதில் துண்டு 3 எனச் சுட்டிய நிலப்பரப்பு 3 குளி 7.97. இதன் எல்லைகள்:

**கிழக்கு :** துண்டு 9 எனச்சுட்டப்பட்ட கிணறு.
**வடக்கு :** கந்தையா சிவபாக்கியத்தின் ஆதனம்.
**மேற்கு :** கனபதிப்பிள்ளையின் உரித்தாளர்களினதும், A.வினாசியும் பெண் சின்னக்குட்டியினதும், N.சின்னத்தம்பியும் பெண் சின்னப்பிள்ளையினதும் ஆதனங்கள்.
**தெற்கு :** துண்டு 6 எனச் சுட்டப்பட்ட கனகசங்கரி தர்மசங்கரியின் ஆதனம். இதடங்கலும் இன்னும் துண்டு 7 என சுட்டப்பட்ட பாதையூடாக போக்குவரத்து உரித்தும்.

இவ்வாதனத்தை, விஜயசங்கரி தர்மசங்கரி என்பவர் தனது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விஜயசங்கரி தர்மசங்கரி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(C-6175)

**மாநகர முதல்வர்,**
**யாழ் மாநகர சபை.**

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -04, கோவில் வீதி, இல.310 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் உரிமையாளர் த.பத்மநாதன் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை, சின்னத்தம்பி சிற்றம்பலம் நாகலிங்கமும் நாகலிங்கம் மகள் நேசலக்ஷ்மியும் நாகலிங்கம் மகள் பத்மாவதியும் மற்றும் நாகலிங்கம் மகள் கமலாவதி ஆகியோர் 03.05.1954 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.விசுவலிங்கம் முகதாவில் 2600 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பிஜயா பத்மநாதனுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம், நியூயோர்க், அமெரிக்காவில் வசிக்கும் தற்காலம் இல.310, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்மநாதன் ராகவன் 09.06.2025 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீதரன் அம்பிகா முகதாவில் 1331ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம், தனது காலஞ்சென்ற தந்தையான தம்பிஜயா பத்மநாதன் மரணசாதனம் நிறைவேற்றாமலும் நிர்வாகத் தத்துவப்பத்திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான சொத்துக்களை விட்டு இறக்க, குறித்த ஆதனம் அவரின் இரண்டு பிள்ளைகளில் ஏற்கனவே சீதனம் வழங்கப்பட்ட எனது சகோதரியாகிய நரேந்திரன் பெண் சுதாமதியைத் தவிர்த்து என்னை பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை, நல்லூர் பிரதேச செயலகர் பிரிவு, யாழ்ப்பாணம் மாநகர சபை, கிராமசேவகர் பிரிவு J/106. "சாணி வளவும் சாட்டையன் வளவும் அழககோன் முதலியார் வளவும்" நில.பர 06 குளி 6 1/2 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.சின்னத்துரையினால் 20.04.1954 திகதியிட்டு 818 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப் படத்தில் சுட்டப்பட்டதன் படி நில.பர 6 குளி 7 11/16.இதில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகம் நில.பர மூன்றும் குளி மூன்றொடு முப்பத்தி யிரண்டில் இருபத்தேழும் (நில.பர 3 குளி 3 27/32) வீடும் கிணறும் பயிர்வகைகளும்.
இதற்கு எல்லைகள்:

**கிழக்கு :** வி.அரியகுட்டி பெண் விசாலாம்பாளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
**வடக்கு:** மேற்குறித்த படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்டுள்ள S.S.நாகலிங்கத்தினதும் மறுபேர்களினதும் ஆதனம்.
**மேற்கு :** வீதி.
**தெற்கு :** தம்பிப்பிள்ளை பொன்னம்பலத்திற்கும் பெண் பவளரத்தினத்திற்குமுரிய ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது பத்மநாதன் ராகவன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பத்மநாதன் ராகவன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(C-6176)

**மாநகர முதல்வர்,**
**யாழ் மாநகர சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 20 நிமிடங்களில் 7 இடங்களில் தாக்குதல்

### டுபாயில் பதற்றம்



(டுபாய்)

டுபாயின் ஜெபல் அலி துறைமுகப் பகுதியில் 20 நிமிடங்களில் 7 இடங்களில் சக்திவாய்ந்த தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவுக்கு உதவும் வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரான் சார்பில் அதன் கூட்டாளி அமைப்பான ஏமன் ஹவுதி கிளர்ச்சிப்படையினரும், வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில், டுபாய் துறைமுகமான ஜெபல் அலி மற்றும் தொழில் மண்டலப் பகுதியில் இன்று அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட இடங்களில் இருந்து விண்ணை முட்டும் அளவுக்கு கரும் புகை வெளியேறியது.

20 நிமிட இடைவேளையில் 7 முறை வெடிச்சத்தம் கேட்டதாக ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த வெடிச் சம்பவம் குறித்தோ, இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியோ அதிகாரிகள் எந்தத் தகவலும் அளிக்கவில்லை.

ஏமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் தான் இதற்கு காரணம் என்று ஈராக் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இருப்பினும், ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகள் எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை. அதேபோல, ஏமனின் தலைநகரான சனாவிலும் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, துறைமுகத்திற்கு அருகில் உள்ள எரிபொருள் சேமிப்பு மற்றும் விநியோகக் கிடங்கு ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டதை நாசாவின் போட்டோக்கள் காட்டுவதாக ஈரானின் மெஹர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# எண்ணெய் சந்
## ஹார்முஸ் நம்பிக்

(வோஷிங்டன்)

**ஹார்முஸ் நீரிணைப் பாதையை மீ திறப்பது தொடர்பாக ஈரானுடன் ஓர் ஒப் ஏற்படக்கூடும் என்ற நம்பிக்ன அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகள் ெ படுத்தியதைத் தொடர்ந்து, நேற்று முன் செவ்வாய்க்கிழமையன்று மசகு எண் விலைகள் கடந்த மூன்று வாரங்களில் இ அளவுக்குக் குறைந்தன.**

அதன்படி, எண்ணெய் விலைகளுக்கான உலகளாவிய அளவுகோலாகத் திகழும் 'பிரெண்ட்' மசகு எண்ணெயின் ஒரு பீப்பாயின் விலை சுமார் 5சதவீதம் சரிந்து, 80 டொலருக்கும் குறைவாகக் குறைந்தது.

பிரெண்ட் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியுடன், அமெரிக்க வெஸ்ட் டெக்சாஸ் இண்டர்மீடியட் விலையும் 5சதவீதத்திற்கும் மேல் சரிந்து, ஒரு பீப்பாய் 76 டொலராக குறைந்தது.

இரண்டு ஒப்பந்தங்களும் ஜூலை 13 ஆம் திகதிக்குப் பிறகு தங்களின் மிகக் குறைந்த நிலை

## வடகொரியா பற்றிய அவதூறு அமெரிக்காவுக்கு கண்டனம்!



(பியாங்யாங்)

வட கொரியாவின் ஐடி ஊழியர்களைப் பற்றித் தவறாகப் பேசி அந்நாட்டின் பிம்பத்தை அமெரிக்கா கெடுப்பதாக வட கொரியா குற்றம் சாட்டியுள்ளது.

வட கொரியா தனது அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைத் திட்டங்களுக்கு நிதி திரட்ட, அவர்களின் திறமையான ஐடி ஊழியர்களை போலி அடையாளங்களுடன் வெளிநாட்டு நிறுவனங்களில் பணியாற்ற பயன்படுத்துவதாக அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 10 நட்பு நாடுகள் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டன.

அதில், வட கொரிய ஐடி ஊழியர்கள் வருமானத்தைப் பெற இணைய தளங்களில் பிற நாட்டுக் குடிமக்களைப் போன்று அடையாளப் படுத்திக் கொண்டு, அந்த வருமானத்தை தங்களது நாட்டு அரசுக்கு வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும், வட கொரிய ஊழியர்கள் தங்கள் உண்மையான அடையாளங்களை மறைக்க செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்துவதாகவும் அதில் எச்சரிக்கப்பட்டது.

வடகொரியா மீது சர்வதேச அளவில் பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால், நாட்டின் திட்டங்களுக்கு நிதி திரட்ட சைபர் குற்றங்கள், கிரிப்டோ கரன்சி மற்றும் பண மோசடி நடவடிக்கைகளில் அந்நாடு பரவலாக ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்த நிலையில், அமெரிக்க உள்ளிட்ட நாடுகள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கைக்கு வடகொரியா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அந் நாட்டின் செய்தி நிறுவனம் வெளியிட்ட மறுப்புச் செய்தியில், "எங்கள் நாட்டின் மீதான பிம்பத்தைக் கெடுக்கும் தீய நோக்கத்துடன் வைக்கப்பட்ட வழக்கமான அரசியல் குற்றச்சாட்டு இது. இணைய வெளி தொடர்பான முக்கிய வளங்களை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அமெரிக்கா, பிற நாடுகளிடம் இருந்து சைபர் அச்சுறுத்தல்கள் வருவதாகக் கூறுவது மிகவும் முரணானது.

இறையாண்மை கொண்ட நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து தனது சட்டவிரோதக் கொள்கைகளை நியாயப்படுத்துவதற்கான அமெரிக்காவின் சாக்குபோக்கு மட்டுமே இது" எனத் தெரிவித்துள்ளது. (நி)

## தீவிரமடை
## ஜப்பானில் 3

(டோக்கியோ)

ஜப்பானில் கோடைக்கால வெப்பம் தீவிரமடைந்து வரும் நிலையில், டோக்கியோவிலுள்ள தமா உயிரியல் பூங்காவில் வெப்பம் தொடர்பான பாதிப்புகளால் மூன்று பெண் சிங்கங்கள் உயிரிழந்துள்ளன.

கடந்த ஜூலை மாத இறுதியில், ஒரே வார இடைவெளியில் 3 முதல் 15 வயதுக்குட்பட்ட மூன்று பெண் சிங்கங்கள் உயிரிழந்தன.

உடற்கூறாய்வு முடிவுகளில், நீர்ச்சத்து குறைபாடு மற்றும் பல உறுப்புகள் செயலிழந்தமையே அவற்றின் இறப்புக்கு காரணம் எனத் தெரியவந்துள்ளது.

தற்போது மேலும் மூன்று சிங்கங்கள் உடல்நலக் குறைவால் எழுந்து நிற்க முடியாத நிலையில் உள்ளதாகவும், அவற்றுக்கு திரவ ஆகாரங்கள், மருந்துகள் மற்றும் விற்றமின்கள் வழங்கப்பட்டு வரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

# ...தையில் அதிரடி மாற்றம்
# ...க்கையால் விலை சரிந்தது

...ப மீண்டும் ஒப்பந்தம் ...ிக்கையை ...ள் வெளிப் ...முன்தினம் ...ண்ணெய் ...ல் இல்லாத




...க்குச் சரிந்தன.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ மற்றும் திறைசேரியின் அமைச்சர் ஸ்காட் பெசென்ட் ஆகிய இருவரும், ஹார்முஸ் நீரிணையூடான சரக்குக் கப்பல் போக்குவரத்தை இந்த வாரத்திலேயே மீண்டும் தொடங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கும் வகையிலான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்டுள்ளதாக அறிவித்தனர்.

ஈரான் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளுடன், அந்த நீரிணை வழியாக மேலதிக கப்பல்களைச் செலுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ரூபியோ தெரிவித்தார்.

அதேநேரம், ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பதற்கான ஒப்பந்தம் விரைவில் எட்டப்படலாம் என்றும் தெரிவித்தார். ( நி)

# செயற்கை கோள் தொகுதியை விண்ணில் ஏவியது சீனா



(பீஜிங்)


சீனா தனது மற்றுமொரு குறைந்த புவிச் சுற்றுப்பாதை இணைய செயற்கைக் கோள் தொகுதியை வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது.

அந்த நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் மாலை 4.52 மணியளவில், ஹைனான் வர்த்தக விண்வெளி ஏவுதளத்தில் இருந்து Long March-8A ஏவுகணை மூலம் இந்த செயற்கைக்கோள் தொகுதி விண்ணில் செலுத்தப்பட்டது.

இதன் மூலம், குறைந்த புவிச் சுற்றுப்பாதை இணைய செயற்கைக் கோள்களின் 23 ஆவது தொகுதி வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், செயற்கைக் கோள்கள் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதையடுத்து, இந்த விண்வெளி நடவடிக்கை முழுமையாக வெற்றியடைந்துள்ளதாக சீனா அறிவித்துள்ளது. (நி)

# ...டையும் வெப்ப நிலை
# ...3 சிங்கங்கள் மரணம்



...வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், நான்கு சிங்கங்கள் குணமடைந்து வரும் நிலையில், ஆறு சிங்கங்கள் ஆரோக்கியமாக உள்ளன. அவை குளிரூட்டி மற்றும் பாரிய மின்விசிறிகள் வசதி கொண்ட பிரத்தியேக அறைகளுக்கு மாற்றப்படவுள்ளன.

இதேவேளை, ஜப்பானில் இந்த கோடைக்காலத்தில் மாத்திரம் 43,000இற்கும் மேற்பட்டோர் வெப்ப வாதத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காலநிலை ஆபத்தைக் கருத்தில் கொண்டு மக்கள் தங்களைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ளப் பல்வேறு முன்னெச்சரிக்கை வழிகாட்டுதல்களை அந்த நாட்டு அரசாங்கம் வெளியிட்டுள்ளது. (நி)

# ஜப்பானை அச்சுறுத்தும் டொல்பின் சூறாவளி

(டோக்கியோ)

பசுபிக் பெருங்கடலில் உருவான "டொல்பின்" தீவிர சூறாவளி ஜப்பானை நோக்கி அதிவேகமாக நகர்ந்து வருவது பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்பதால் மக்கள் உடனடியாகப் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சூறாவளி மணித்தியாலத்திற்கு 185 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக் கூடியதென ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜப்பான் வானிலை ஆய்வு மையத்தின் தகவலின்படி, பொனின் தீவுகளை ஏற்கனவே கடந்துள்ள இந்த சூறாவளி, வார இறுதியில் ஒகினாவா தீவில் முழுமையாகக் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.



இதனால் ஏற்படும் கடல் அலை சீற்றம் மற்றும் பலத்த காற்று காரணமாக விமானம் மற்றும் படகுப் போக்குவரத்துகள் கடுமையாகப் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

அத்துடன், இந்த சூறாவளியின் தாக்கம் காரணமாக தாய்வானின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள், சீனா ஆகிய பகுதிகளிலும் பலத்த மழை மற்றும் காற்று வீசக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆங்காங்கே மின் தடை, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால், கடலோரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு உள்ளூர் நிர்வாகங்கள் கேட்டுக் கொண்டுள்ளன. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் கடந்த யூலை மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந் நிலையில் இன்றைய தினம் சப்பறத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என ஆலய பரிபாலகரும் பூசகருமான சிவஸ்ரீ ம. ஞானசேகரம் ஐயா அறிவித்துள்ளார். (8)



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990- இந்து
நட்சத்திரம்: சித்திரை
8இல்செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில் : A/L. நூலக கவனிப்பாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16607

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:ரேவதி
4இல்சூரி செவ்
கி-பா-31
உயரம்: 5'7"
தகைமை/தொழில்- BA,DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16610

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
6இல்சூரிசெவ்
கி-பா- 9
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L,Busin ess(Own)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/16611

பிறப்பு: 1969- இந்து
நட்சத்திரம்:உத்தரம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்- London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16612

பிறப்பு: 1971- இந்து
நட்சத்திரம்:பூராடம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L,சித்த வைத்தியர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16613

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991 -இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா-25 ½
11இல்சூரிசெவ்
உயரம்: 5'
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான ஆண்
தொ.இ: G/16619

பிறப்பு - 1999 - இந்து
நட்சத்திரம்: அவிட்டம
கிபா- 34
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Software Engi neering
எதிர்பார்ப்பு : Engineer
தொ.இ: G/16625

பிறப்பு-1995 - இந்து
நட்சத்திரம்: அனுசம்
7இல்செவ்
கிபா-52 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc,MSc, Software Engineer (pvt)
எதிர்பார்ப்பு : உத்தியோகம்
தொ.இ: G/16627

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Researcher (NGO)
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/12936

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:1 7
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/12110

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 634



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குழந்தையின் உணவுப் பழக்கம்

"என்னுடைய குழந்தை சரியாகவே சாப்பிடுவதில்லை.அதை நினைத்தால் தான் மிகவும் கவலையாக இருக்கிறது !"

இப்படிச் சொல்லி வருத்தப்படுகின்ற, அம்மாக்கள் தான் நிறைய பேர் உண்டு. ஆனால் குழந்தைகள் சம்மந்தமான நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"என்னுடைய குழந்தை இப்படிச் சாப்பிட வேண்டும் அப்படிச் சாப்பிட வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்!" என்று சொல்கிறார்கள். நாம் எதிர்பார்க்கின்றது மாதிரியே குழந்தைகள் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒன்றும் கட்டாயமில்லை.

குழந்தைகளின் பசி என்பது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உட்படுவது தான்.குழந்தைகள் அதிகமாக விரும்பி சாப்பிடுகின்ற உணவு எப்படி இருக்கும் தெரியுமா?

அதிக எண்ணெய்ப் பசை இருக்கக்கூடாது. பார்ப்பதற்கு அழகாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உணவைத் தான் குழந்தை அதிகமாக சாப்பிடும் .

பெரியவர்களை விட குழந்தைகளுக்கு சுலபமாக வாந்தி எடுக்க வந்து விடும். அதனால் எண்ணெய்ப் பதார்த்தங்களை, தான் அறியாமலேயே தவிர்த்துவிடும்.சில தாய்மார்கள் குழந்தையில் உள்ள ஆசையில் தட்டு நிறைய ஆகாரத்தை நிரப்பிக் கொண்டு வந்து வைத்துவிடுவார்கள்.

குழந்தை அதைப்பார்க்கும் , உடனே அதற்கு என்ன தோன்றும் தெரியுமா?"நிறையப் போட்டு நம்மளைச் சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்துகிறார்கள்!" என்று தோன்றும் .

தட்டில் கொஞ்சம் கொஞ்சமாக ஆகாரத்தை வைக்கலாம். அப்படி வைத்துவிட்டு குழந்தையைப் பார்த்து,பார்த்தியா? எல்லோரையும் விட உனக்குத் தான் கொஞ்சமாய் போட்டிருக்கின்றேன் என்று சொல்ல வேண்டும் .

இன்னொரு வழி கூட இருக்கு தட்டு பெரிசாக இருக்கலாம். கொஞ்ச ஆகாரத்தைப் பெரிய தட்டில் வைத்து கொடுத்தால் பார்ப்பதற்கு ரொம்ப குறைவாக தெரியும் .

குழந்தையும் மிரளாமல் சாப்பிட்டு விடும்! இன்னொரு விடயம்.

ஒரு குழந்தை தனக்குப்பிடித்த ஆகாரத்தைத் தானே தேர்ந்தெடுக்கின்ற மாதிரி செய்ய வேண்டும் .என்ன செய்யலாம் என்றால் முடியும் போது எல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட உணவு வகைகளை வைக்கலாம்.

உதாரணத்துக்கு இட்லியும், உப்புமாவும் வைக்க எது வேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளும் . அத்துடன் சட்னியும்,. சாம்பாரும் வைக்க! எது வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளும் ரொம்பப் பேர் செய்கின்ற ஒரு பெரிய தப்பு சாப்பிடும் போது குழந்தையை மிரட்டுவது! "ஒழுங்காக சாப்பிட வேண்டும். இல்லை என்றால் பூச்சாண்டியிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்! என்று மிரட்டுவார்கள் சிலபேர்

இது எல்லாம் பிரயோஜனப்படாது. அதுவும் இந்தக் காலத்துப் பிள்ளைகள் நம்மளை பிடித்துப் பூச்சாண்டியிடம் கொடுத்து விடும்!குழந்தை பயந்து போனால் அது "டென்ஷனாக" மாறும். அதன் பிறகு அது பசி இன்மையாக உருவெடுக்கும்!

அதற்குப் பிறகு அது சாப்பிடுகின்ற அளவு இன்னும் குறைந்து விடும். குழந்தை பிடிவாதமாக சாப்பிடமாட்டேன் என்று சொன்னால் அது விடம் பேரம் பேசுவது கூட தப்பில்லை.

காய்கறிகளைச் சுத்தமாக சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடிக்கின்ற குழந்தைகளிடம் குறைந்த பட்சம் கரட் மட்டுமாவது சாப்பிடச் சொல்லலாம் .

ஒரு குழந்தை தான் எதைச் சாப்பிட வேண்டும் என்று தானே தீர்மானிக்கின்றது மூலமாக அது தன் சுதந்திரத்தை நிலை நாட்ட முயல்கிறது! அந்த சமயத்தில் நீங்கள் "இதைச் சாப்பிடாதே!" "அதைச் சாப்பிடாதே!" என்று சொல்லிக் கொண்டிருந்தால் அதன் எதிர்ப்பு இன்னமும் அதிகமாகி விடும் .

வயிறு நிறைந்து விட்டது என்று சொல்லி விட்டால் சரி என்று சொல்லுங்கள். "இல்லை இல்லை இன்னும் கொஞ்சம் சாப்பிடு என்று சொல்லிக்கொண்ட இருக்காதீர்கள்.

இது எல்லாம் குழந்தை வளர்ப்பு நிபுணர்கள் நமக்குச் சொல்லிக் கொடுக்கின்ற ஆலோசனைகள்.

ஒருவர் "குழந்தை வளர்ப்பது எப்படி?" என்று ஒரு புத்தகம் எழுதினார். ரொம்பப் பெரிய புத்தகம் . அவருடைய நண்பர் ஒருவர் ஒருநாள் அவரைத் தேடி வந்து சொன்னார்.

"சேர்! நீங்கள் குழந்தை வளர்ப்பது எப்படி என்று ஒரு பெரிய புத்தகம் எழுதியிருக்கின்றீர்கள் அது எனக்கு ரொம்ப உபயோகமாக இருக்கு சேர்!" என்றார்.

"அப்படியா?" என்றார் இவர். "ஆமாம் தினமும் என் மகன் ஏதாவது தப்பு செய்தான் என்றால் அந்தப் புத்தகத்தால் தான் [illegible] அடிக்கிறேன்!" அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சட்டவிரோத கசிப்புடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி -தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை துவரை ஆற்று பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 1800 லீற்றர் கோடா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-316)



இலங்கை வங்கியின் 87 ஆவது ஆண்டுவிழா அண்மையில் ஸ்ரான்லி வீதிக்கிளையில் அதன் முகாமையாளர் ஆர்.இரட்ணராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் வ.சிவானந்தன் கலந்து கொண்டதுடன் வாழ்த்துரையை ஓய்வு நிலை வங்கி அதிகாரி கே.கே.விக்னேஸ்வரன் வழங்கியிருந்தார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 200 | 300 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 | -- | 200 | 350 |
| பச்சைமிளகாய் | 1000 | 1000 | 1400 | 820 | 1000 | 650 |
| தக்காளி | 400 | 400 | 400 | 450 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 210 | 200 | 140 |
| கோவா | 200 | 300 | 250 | 200 | 300 | 250 |
| கரட் | 400 | 400 | 400 | 350 | 400 | 350 |
| பூசணி | 120 | 200 | 160 | 170 | 200 | 150 |
| புடோல் | 150 | 150 | 200 | 110 | 200 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 260 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 240 | 240 | -- | 200 | -- |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 350 | 400 | 250 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 180 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 300 | 350 | 400 | 400 |
| பயற்றங்காய் | 150 | 120 | 250 | 150 | 200 | 130 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 | 300 | 300 | 260 |
| பீற்றூட் | 400 | 400 | 500 | 350 | 400 | 300 |
| கறிமிளகாய் | 400 | 500 | 800 | 500 | 800 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 300 | 150 | 250 | 200 |
| போஞ்சி | 400 | 550 | 600 | 400 | 600 | 400 |
| தம்புள்ள-கத்தரி | 200 | 150 | 300 | -- | 280 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 150 | 60 | 80 | 60 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 200 | 450 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 140 | 150 | 140 | 100-150 | 110 |
| இராசவள்ளி | 350 | 360 | 300 | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 400 | 220 | 400 | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 180 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | -- | 100 | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | -- | 150 | 75 |

# போதைப் பொருட்களுடன் 757 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

முழு நாடுமே ஒன்றாக என்ற நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் 757 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் சுமார் 760 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், 757 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். (நி)

# இராசிபலன்

06.08.2026
ஆடி 21, வியாழக்கிழமை
அட்டமி பிற்பகல் 4.13 மணிவரை

பரணி முன்னிரவு 6.26 மணி வரை
சுப நேரம் 7.34- 9.04 மணி வரை
இராகு காலம் 1.34-3.04 மணி வரை

சந்திராஷ்டமம்
சித்திரை,சுவாதி

வளவன்

**மேஷம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போச சுகமுண்டு

**கடகம்** கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**துலாம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்,உறவினர்களின் சந்திப்பால் உற்சாகம் கூடும், போசன நன்மையுண்டு.

**மகரம்** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சிந்தித்து செயற்படும் நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.

**சிம்மம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்தியுண்டு, சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணவரவு திருப்தி தரும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்துசேரலாம்.

**கன்னி** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், பொறுமையால் பெருமைகாண வேண்டிய நாள்.

**தனுசு** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

அன்பு அருளைத் தரும், ஆற்றல் பொருளைத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1106





இவ்விதமெல்லாம் ஜனங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே "அதோ படை வருகிறது!" என்று கூக்குரல் ஒன்று எழுந்தது. பலரும் அங்குமிங்கும் ஓடிச் சென்று பார்த்தார்கள். உயர்ந்த கட்டடங்களின் மீதும், உயரமான மரங்களின் மீதும் ஏறிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்தவர்கள் கண்ட காட்சி ஒரேயடியாக வியப்பையும், திகைப்பையும் அளிப்பதாக இருந்தது.

தஞ்சையிலிருந்து மேற்கேயும், தென்மேற்குத் திசையிலேயும் புறப்பட்டுச் சென்ற மூன்று பெரிய சாலைகள் அக்காலத்தில் இருந்தன. ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் போகும் சாலை மற்றொன்று மதுரை வழியாகத் தென்பாண்டிய நாட்டுக்குச் சென்ற சாலை இன்னொன்று உறையூர் வழியாகக் கரூருக்கும், சேர நாட்டுக்கும் சென்ற நீண்ட அகன்ற சாலை.

அன்று பிற்பகலில் மேற்கூறிய மூன்று சாலைகள் வழியாகவும் படைகள் அணிவகுத்து வந்து கொண்டிருந்தன. அவற்றில் முன்னால் வந்த அணிகள் கண்ணுக்குத் தெரிந்தனவே தவிர, பின்னால் அந்த அணிவரிசைகள் எங்கே முடிகின்றன என்பதே தெரியவில்லை. அவ்வாறு அப்படை வீரர்களின் அணிகள் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தன.

நல்ல வேளையாக, அப்படைகளின் முன்னணியில் பெரிய புலிக்கொடிகள் பறந்து கொண்டிருந்தபடியால் பகைவர்களின் படைகள் என்று சந்தேகிக்க இடம் ஏற்படவில்லை. சோழ சாம்ராஜ்யத்துச் சைன்யங்கள் தான் அவை! ஆனால் எதற்காக வருகின்றன? எங்கிருந்து வருகின்றன?

இன்னும் சற்று அருகில் அப்படைகள் நெருங்கி வந்த போது புலி உருவம் தாங்கிய கொடிகளில் சிறிய அளவில் பதித்திருந்த இலச்சினைகளும் கண்ணில்பட்டன.

அவற்றிலிருந்து, கொடும்பாளூர்த் தலைமைக்கு உட்பட்ட பராந்தகச் சோழப் பெரும்படையும், தென்பாண்டிய நாட்டிலிருந்த தெரிந்த கைக்கோளர் பெரும் படையும், ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்த அரிஞ்சய சோழப் பெரும்படையும் சேர்ந்து வந்துகொண்டிருந்தனவென்று தெரியவந்தது.

இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம், தென்திசைச் சேநாதிபதியான பூதி விக்ரம கேசரியே மேற்கூறிய படைகளுடன் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தஞ்சை நகர மாந்தர்களுக்குத் தெரிந்து போய் விட்டது. இதிலிருந்து, சைன்யங்கள் எதற்காக வருகின்றன என்பதை ஊகித்து உணர்வதும் எளிதாயிற்று.

கொடும்பாளூர் பெரிய வேளாரான பூதி விக்கிரம கேசரி, ஈழத்துப்பட்ட சிறிய வேளாரின் திருமகளாகிய வானதியைப் பொன்னியின் செல்வருக்கு மணம் புரிந்து கொடுத்து, அவரையே சோழ நாட்டுச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க விரும்புகிறார் என்பது சோழ நாட்டில் எல்லாருக்கும் தெரிந்திருந்த செய்தியே யாகும்.

கிழக்கேயிருந்து இளவரசர் அருள்மொழிவர்மர் பொது ஜனங்களின் ஆரவாரத்துடன் அழைத்து வரப்படுவதும், மேற்கேயிருந்து சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி மாபெரும் சைன்யத்துடன் அதே சமயத்தில் தஞ்சையை நோக்கி வருவதும் ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருந்தன.


(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

யோசப் பாலாவின்...

## தந்திர வியாபாரி



வருவாய்க்கு வழிதேடி தினமும் தொழில் தேடி அலையும் பலரைக் கண்டோம். உழைத்துக் களைத்து ஊதியத்துடன் வந்து குடும்பத்தை காத்து வரும் பொறுப்புள்ள மனிதரில் வேறுபட்டவனாக பாலு என்பவன் தன் வீட்டில் பத்துக் கோழிகள் வளர்த் தான்.

வாராவாரம் சந்தைக்குச் சென்று கோழி விற்று வருவான். அவனிடம் இருப்பதே பத்தே பத்து கோழி தான். அதனை யாரும் முழுதாக கேட்டாலும் கொடுக்க மாட்டான். இரண்டு இரண்டாகவே விற்பான் பாலு. இதனை சந்தையில் கண்ட நண்பன் ராசு.

பாலு பாலு ஏன் கோழிகளை முழுதாக விற்பதில்லை என நண்பன் ராசு கேட்டான்.

அது ஒன்றுமில்லை எனது வியாபாரம் ஒருவரோடு முடிந்து விடக்கூடாது. பலரோடு பழகி விற்பனையை விஸ்தரிப்பதுடன் பலருக்கும் பயன்தரட்டும் என்ற நோக்கம் தான் என்றான் பாலு.

ராசுவுக்கோ சந்தேகம், இதில் ஏதோ மர்மம் இருப்பதை உணர்ந்தான்.

பத்தே பத்து கோழியுடன் வாராவாரம் சந்தைக்கு வருகிறானே ஒரே தோற்றத்தில் அல்லவா எல்லாக் கோழிகளும் இரு[illegible] என்ற சந்தேகம் தான். தூரத்தில் இருந்து சந்தைக்கு வருபவர்கள் கோழிகளை வாங்கிச் சென்றாலும் அடுத்த வாரத்தில் தங்கள் கோழிகளை காணவில்லை என்ற முறைப்பாடுகள் ராசுவின் காதில் எட்டியது.

அது எப்படி என பாலுவின் வீட்டுக்கு சென்றான். பாலுவோ வாசலில் வைத்து ரா[illegible]திருப்பி விடத் திட்டம் போட்டான். ராசுவோ மிகவும் களைப்பாக இருக்கிறது கொஞ்சம் தண்ணீர் தா பாலு என வீட்டின் உள்ளே நுழைந்தான்.

பாலு சொன்னான் வா வா தண்ணீர் தாறன். நான் கோழிக்கு சாப்பாடு போட வேண்டும் தண்ணீரைக் குடித்து விட்டு உடனே போ நண்பா என்றான்.

என்ன சாப்பாடு கோழிக்கு வைக்கிறாய் நன்றாக குழுகுழுப்பாக இருக்கிறதே கோழிகள் என்றான் ராசு.

அட அதுதான் இரகசியம் அதை மட்டும் கேட்காதே என்றான் பாலு.

ராசுவுக்கோ சந்தேகம் அதிகமானது. கோழிகள் முற்றத்துக்கு வருவதைக் கண்டான். அட இது போன வாரம் சந்தையில் விற்ற கோழி போல் இருக்கிறதே என்றான் நண்பன் ராசு.

அது போலதான் எல்லாக் கோழிகளும், அதுக்கு நான் போடும் சாப்பாடு தான் காரணம் என்றான்.

அது ஒன்றுமில்லை நீ தண்ணீரைக் குடித்துவிட்டு போ நண்பா எனக்கு அதிக வேலை உண்டு என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

*- திருக்குறள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பலாலி விமான நிலையம் விஸ்தரிப்பு நடக்குமா?

பலாலி சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்குத் தேவையான காணிகளைச் சுவீகரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று; காணி உரிமையாளர்களுடன் நடந்த சந்திப்புக் குழம்பிப் போனதை அறிந்த போது மிகவும் வேதனையாக இருந்தது.

ஆம், வடமாகாணத்தின் அபிவிருத்தி சாத்தியமாக வேண்டுமாயின், வடபகுதி மக்கள் தொழில்துறை தொடர்பிலும் முதலீட்டு விடயத்திலும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்தும் கருசனை கொள்வதாயின், அதற்கான சூழமைவு உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறான சூழமைவை ஏற்படுத்துவதில் பல்வேறு காரணிகள் முதன்மை பெறுகின்றன.

உதாரணத்திற்கு இன்று நம் தமிழினம் ஓரளவேனும் தலை நிமிர்ந்து நிற்பதற்கு மூல காரணம் நம் உறவுகள் வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்று அங்கு வாழ்வதாலாகும்.

ஆம், ஈழத் தமிழர்களுக்கான வெளிநாட்டு வாய்ப்பு என்பது, உள்நாட்டுப் போரினால் ஏற்பட்டது.

அதாவது இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது இனவன்மத்தோடு கலவரங்களை ஏற்படுத்த, அதன் விளைவு உள்நாட்டுப் போராக மாற்றமுற நம் மக்கள் புலம்பெயருகின்ற சூழமைவு ஏற்படலாயிற்று.

இத்தகைய புலம்பெயர்வு உள்ளக மட்டத்தில் சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் வெளிநாடுகளில் நம்மவர்கள் பொருளாதார பலத்துடன் இருப்பதற்கும் நம் தமிழ்ப் பிள்ளைகள் உயர் பட்டப்படிப்புகளை, உயரிய தொழில் வாய்ப்புகளை வெளிநாடுகளில் பெறுவதற்கும் எங்கள் இனத்தின் பண்பாடுகள், கலாசார நெறிமுறைகளை வெளிநாட்டவர்கள் அறிவதற்கும் வெளிநாடுகளின் ஆட்சி அதிகாரங்களில் நம் புலம்பெயர் தமிழர்கள் பங்கேற்பதற்கும் போர்ச்சூழல் தந்த புலம்பெயர்வே மூலகாரணமாகும்.

இது ஒரு காரணம் மட்டுமே. இதுபோல பலாலி சர்வதேச விமான நிலையம் விஸ்தரிக்கப்படும் போது, அதனால் எங்கள் வட பிராந்தியம் பல்வேறு துறைசார் அபிவிருத்திகளை நோக்கி நகரும். இதனையே நாம் ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

உண்மை. பலாலி சர்வதேச விமான நிலையம் விஸ்தரிக்கப்படும் போது அதனூடு வேலைவாய்ப்புகள், வர்த்தக முயற்சிகள், முதலீடுகள் என்பவற்றிற்கான சந்தர்ப்ப சூழல்கள் நிறையவே ஏற்படும்.

என்ன செய்வது எங்களைப்பிடித்தது இன்னும் விலகுவதாக இல்லை.

ஆம், பலாலி சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்குத் தேவையான காணிகளை சுவீகரிப்பதாயின், அதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இதைவிடுத்து சீதனம் பற்றி எதுவும் கதையாமல், திருமணப் பதிவை எழுதுவதற்காகப் பதிவாளரை அழைத்து வந்து விட்டால், திருமணப் பதிவு நடந்து விடுமா என்ன?

ஆக, முதலில் சுவீகரிக்கப்படும் காணிகளின் பெறுமதிகளை காணி உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் சம்மதத்தைப் பெறவேண்டும்.

ஆனால் அது நடக்கவில்லை எனும் போது, பலாலி சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்பு தென்பகுதிக்கு மட்டுமல்ல, வடபகுதியைச் சார்ந்த சில தரப்புகளுக்கும் விருப்பமில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது.

# யாழ்ப்பாணத்தில் சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## சுற்றுலாப் பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான சுற்றுலா மையங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுற்றுலாத் துறைப் பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றக் கூட்டம் சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்க தலைமையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

அதில் பிரதி அமைச்சர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணங்களில் சுற்றுலாத்துறையை விரிவுபடுத்துவதற்கு சிறிய அளவிலான திட்டங்கள் மாத்திரம் போதாது என்றும் பெரிய முதலீடுகள் மற்றும் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்கள் அவசியம்.

இலங்கைக்கு சர்வதேச ரீதியில் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 53,000 மட்டுமே. இந்த நிலைமையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும்.

இந்த ஆண்டு 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதை இலக்காகக் கொண்டுள்ளோம். உலக சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சி பெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளும் அந்த வளர்ச்சியின் முழுமையான பயனைப் பெற வேண்டும்.

ஒரு பூங்கா அல்லது சிறிய கட்டுமானத் திட்டம் ஒன்றை அமைப்பதன் மூலம் மட்டும் பொருளாதார மாற்றத்தை உருவாக்க முடியாது. பெரிய அளவிலான முதலீடுகள், தரமான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஒருங்கிணைந்த திட்டங்கள் அவசியம்.

யாழ்ப்பாணக் கோட்டை, கடற்கரைப் பகுதிகள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் சுத்தமாகவும் அழகாகவும் பராமரிக்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாணம் சுற்றுலா மற்றும் உட்கட்டமைப்பு முதலீடுகளுக்கான முக்கிய பிராந்தியமாக மாற வேண்டும்.

பல ஆண்டுகளாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவது எமது பொறுப்பு.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் முக்கியமான சில பெரிய திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினால், வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனப் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7,33)

# சாவகச்சேரி நகர சபையின் துணைத் தலைவர் பதவி நீக்கம்

## ஓகஸ்ட் 19 ஆம் திகதி இறுதித் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபையின் துணைத்தலைவர் ஞானப்பிரகாசம் கிஷோரைப் பதவியில் இருந்து நீக்கிய வடமாகாண ஆளுநரின் தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான வழக்கின் தீர்ப்பு, நேற்று (05.08.2026) வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், நீதிமன்றம் தீர்ப்பை எதிர்வரும் 2026 ஓகஸ்ட் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் துணைத் தலைவராகப் பதவி வகித்து வந்த ஞானப்பிரகாசம் கிஷோரை வடமாகாண ஆளுநர் தனது அதிகாரத்தின் கீழ் பதவியிலிருந்து நீக்கியிருந்தார்.

இந்தப் பதவி நீக்க நடவடிக்கை சட்டவிரோதமானது எனக் குறிப்பிட்டு, அதனை இரத்துச்செய்யுமாறு கோரி ஞானப்பிரகாசம் கிஷோர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு தொடர்பான விசாரணைகள் வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வில் பல தடவைகள் இடம்பெற்றிருந்தன. மனுதாரர் சார்பிலும் பதிலாளிகள் சார்பிலும் சட்டத்தரணிகள் தங்களது வாதங்களை முன்வைத்ததைத் தொடர்ந்து, வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படும் என நீதிமன்றம் முன்னதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்றைய நீதிமன்ற அமர்வில் வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தீர்ப்பை வழங்காமல் அதனை எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் மூலம் ஞானப்பிரகாசம் கிஷோரின் பதவி நீக்கம் சட்டபூர்வமானதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பான நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு மேலும் இரண்டு வாரங்களுக்கு பின்னர் வெளியாகவுள்ளது. (ம-7)

## வவுனியாவில் விபத்து
## பேருந்து உரிமையாளர் பொலிஸாரால் கைது

வவுனியா புளியங்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த வீதி விபத்துத் தொடர்பில், சம்பந்தப்பட்ட பேருந்தின் உரிமையாளர் புளியங்குளம் பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (04) கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை 31 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட பேருந்து சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில், அவர் 'ஐஸ்' போதைப்பொருளைப் பயன்படுத்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் ஏற்கெனவே காலாவதியாகியிருந்ததும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

காலாவதியான அனுமதிப்பத்திரம் கொண்டதுடன் போதைப்பொருள் பயன்படுத்திய நபருக்கு பேருந்தைச் செலுத்த அனுமதித்த குற்றச்சாட்டின் அடிப்படையில், பேருந்தின் உரிமையாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப்புளியங்குளம்பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒகஸ்ட் மாத இராசி பலன்கள்

## (01.08.2026-31.08.2026 வரை)



(சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

**கிரகநிலை-** பஞ்சம ஸ்தானத்தில் ராகு, சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி (வ) - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு - இலாப ஸ்தானத்தில் சுக்கிரன், கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** சின்ன விடயத்தையும் பெரிதாக நினைத்து குழம்பிக் கொள்ளும் அதே நேரத்தில் பிரச்சினையை சமாளிக்கும் திறமை பெற்ற துலாராசியினரே,

### பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும்

இந்த மாதம் தொடக்கத்தில் காரியங்கள் தடைபட்டாலும் பின்னர் நன்றாக நடந்து முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஓட்டங்கள் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். அதிக உழைப்பின் பேரில் வேலைகளை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் எல்லா பிரச்சினைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும்.

பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அயலவர்களிடம் வீண் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைப்பட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மனதில் எதை பற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள்




வெற்றிபெறும்.

**சித்திரை 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் மிகவும் விரும்பிய நண்பர்களை விட்டுப் பிரிய வேண்டிய நிலை வரலாம். உங்களின் பொருட்களை மிகவும் கவனமாக பார்த்துக் கொள்ளவும். தூக்கம் இல்லாமல் தவிக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு யோகா போன்ற பயிற்சிகளை செய்வது நன்மையைத் தரும்.

**சுவாதி:** இந்த மாதம் தாய் மாமனிடம் கருத்து மோதல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதால் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகமான உழைப்பினைக் கொடுக்க வேண்டி வரலாம். வேலையில் கவனமுடன் செல்வது நல்லது.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எல்லா நன்மைகளையும் தடையின்றி அடைவீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். இதுவரை தொந்தரவு கொடுத்து வந்த நோய் விலகும். அதனால் ஏற்பட்ட மனபாரம் குறையும். வரக்கூடிய உபரி வருவாயால் கடன் அடைபடும். தொழிலதிபர்கள் எதிர்பார்த்தபடி வரவுகள் வந்துசேரும்.

**பரிகாரம்:** குல தெய்வத்தை பூஜை போட்டு வணங்க குடும்ப பிரச்சினை, தொழிற்பிரச்சினை கல்வியில் தடை போன்றவை விலகும். எதிலும் நன்மை உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 7, 8

**அதிர்ஷ்ட தினங்கள்:** 1, 2, 28, 29 ;



(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

**கிரகநிலை-** சுகஸ்தானத்தில் ராகு, சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி (வ) - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன், கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** கலை இலக்கியத்தின் மீது ஆர்வம் உள்ள விருச்சிக இராசியினரே, உங்களுக்கு தெய்வீக ஈடுபாடும் இருக்கும். இந்த மாதம் நல்ல பலன்கள் உண்டாகும். தந்தையின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை.

தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன்

### பயணங்கள் செல்ல நேரலாம்

மனைவிக்கிடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயற்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கும்.

உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நல்லது. வழக்குகளில் மெத்தன போக்கு காணப்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பயணங்களால் அலைச்சல் உண்டாகும். மனதில் ஒருவித கவலை இருக்கும். மாணவர்களுக்கு தடைகளை தாண்டி கல்வியை கற்க செய்யும் முயற்சி வெற்றி பெறும். சிறப்பாக படித்து முடிப்பீர்கள்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் புதிய ஒப்பந்தங்கள் கைகொடுக்கும். தொழிலதிபர்கள் பங்குதாரர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கணவன்-




மனைவி ஒற்றுமை சுமுகமாக இருக்கும். மனைவி வழியில் வரவேண்டிய சொத்துகள் கிடைக்கும். வியாபாரிகள் எந்தக் கொள் முதலையும் தயக்கமின்றிச் செய்யலாம். வியாபாரம் பெருகும். போட்டியாளர்கள் விலகிச்செல்வார்கள்.

**அனுஷம்:** இந்த மாதம் ஊழியர்களுக்கு வரவேண்டியவை அனைத்தும் வந்துசேரும். கேட்ட இடத்திற்கு மாறுதல் கிட்டும். மகான்களின் சந்திப்பு ஏற்படும். தங்கள் பிள்ளைகளுக்கு வரன் தேடும் பெற்றோர்களுக்கு நல்ல சம்பந்தம் வந்துசேரும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல வாய்ப்புகளைப் பெற்றுத் தரும். உங்களை ஒதுக்கியவர்களே உங்களைத் தேடி வருவார்கள்.

**கேட்டை:** இந்த மாதம் தொழிலாளர்கள் ஓய்வில்லாமல் உழைக்க நேரும். அதற்கேற்றவாறு கூடுதல் வருமானமும் வரும். தொழிலதிபர்கள் நினைத்தபடி உற்பத்தி கூடும். புதிய ஒப்பந்தங்கள் வரும். லாபம் பெருகும். வியாபாரிகள் நல்ல லாபத்தைப் பெறுவார்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். உடல்நிலையில் இருந்துவந்த சிரமங்கள் முற்றிலும் நீங்கும்.

**பரிகாரம்:** முருகனை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். காரிய வெற்றி கிடைக்கும். எதிர்ப்புகள் விலகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 9, 10

**அதிர்ஷ்ட தினங்கள்:** 3, 4, 30, 31

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அராலி வடக்குப்...

வடக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

பின்னர் அந்த வீட்டில் இருந்த 10 பவுண் தங்க ஆபரணங்களை அந்தக் கும்பலானது கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

குறித்த கும்பலானது முகங்களை மூடிக் காட்டியவாறு வந்ததால் அடையாளம் காண முடியவில்லை.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## முன்னாள்...

திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நேற்று (05) முற்பகல் ஆஜரான நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோதே, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அலுவலகத்திற்கு 4 ஊழியர்களை நியமித்து, அவர்களைத் தனிப்பட்ட வேலைகளுக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குறித்த ஆணைக்குழுவில் வாக்கு மூலம் வழங்குவதற்காக நேற்று முன்னிலையாகியிருந்தார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகப் பணியாற்றிய காலத்தில், தமது பணிக்குழாமுக்காகவென தெரிவித்து நியமிக்கப்பட்ட 4 ஊழியர்களில் மூவரை, தமக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிக்கு அமர்த்தியதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மேலும், மற்றைய ஊழியர் அந்தப் பதவிக்கென ஒதுக்கப்பட்ட அலுவலகக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, குறித்த ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் ரூபா 2,768,836.14 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக வழங்கப்பட வழிவகுத்ததன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தி, 'ஊழல்' குற்றத்தைப் புரிந்த குற்றச்சாட்டின் கீழ் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

## காண்பிய...

இன்று வியாழக்கிழமை தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12.00 மணிக்கு காண்பிய விரிப்புக் காணவுள்ளது.

அதனை முன்னிட்டு, இன்று காலை 10.30 மணிக்கு சட்டநாதர் சிவன் கோவிலிலிருந்து சமய அனுஷ்டானங்களுடன், நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்தை ஏற்றிய இரட்டை திருக்கை காளை மாட்டு வண்டில் மங்கள வாத்தியங்கள் முழங்க வளைவை நோக்கிப்புறப்படும்.

அதனைத் தொடர்ந்து, தெய்வேந்திரமுகூர்த்தமாகிய நண்பகல் 12.00 மணிக்கு, எம்பெருமானுக்காக அழைத்து வரப்பட்ட நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்துடன் வரும் காளை மாட்டு வண்டில் முதன்முறையாக புதிய வளைவின் ஊடாகச் செல்லும். அந்த மங்கள நிகழ்வின் மூலம் 'நல்லூரான் வடக்கு வாசல் வளைவு' காண்பிய விரிப்புக் காணும் யாழ்ப்பாணத்தின் கந்தபுராண மரபையும் கலாசாரப் பாரம்பரியத்தையும் எடுத்தியம்பும் வகையில் இவ் வளைவு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7,33)

## 8 என்புக்கூடுகள்...

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 8 என்புக்கூடுகள் புதிதாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 44ஆவது நாளான அகழ்வு நேற்று புதன்கிழமை யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 08 என்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட 8 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என இது வரையில் 98 நாட்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 491 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 489 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7)

## சிலை அமைப்பதற்...

அமைப்பதற்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸாரால் அதன் ஏற்பாட்டாளரும் முன்னாள் வல்வெட்டித்துறை நகர சபை உப தவிசாளருமான கந்தசாமி சதீஷ் அவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் நேற்று வரை வழங்கப்பட்டிருந்த சிலை அமைப்பதற்கான தற்காலிகத் தடையே நீக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி அன்று வல்வெட்டித்துறை பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்த நிலையில் குறித்த வழக்கின் மேலும் ஆதாரங்களை சமர்ப்பிக்க 14 நாட்கள் காலம் கோரப்பட்டது.

எனினும் 106 சட்ட பிரிவின்கீழ் 14 நாட்களுக்கு மேல் தடை உத்தரவு வழங்க முடியாது என்ற அடிப்படையில் நேற்று வரை பொலிஸாருக்கு உரிய எதிராளிக்கு எதிரான உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டிருந்த நிலையில் எந்த விதமான போதுமான ஆதாரங்களோ ஆவணங்களோ சமர்ப்பிக்கப்படாத நிலையில் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தத் தற்காலிகத் தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## விரை...

என தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களிடம் இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று புதன்கிழமை (5) தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சில முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.


இச்சந்திப்பில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

தேர்தலை இப்போதைக்கு நடத்தும் எண்ணம் அரசுக்கோ அரச தலைவருக்கோ இல்லை என்பதைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து இந்திய வெளியுறவு செயலாளர் மாகாண சபைத் தேர்தலை நடத்த அநுர அரசாங்கத்தை வலியுறுத்துவோம் எனத் தெரிவித்தார். (ம-7)





























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வடக்கின் சுற்றுலா மேம்பாடு தொடர்பில்

## சுற்றுலாத்துறை பிரதியமைச்சருடன் ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் ஒருங்கிணைந்த சுற்றுலாத் துறை மேம்பாடு தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் சுற்றுலாத் துறை பிரதியமைச்சர் ருவன் குணசேகரவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரிமுனை சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் குறித்து ஆளுநர் சுட்டிக்காட்டினார். அத்துடன், அப்பகுதியில் அடிப்படை யான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடான ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையில் முதலீடு செய்வதற்குப் பல முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் முன்வருகின்ற போதிலும், வனவளத் திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்டவர்களிடமிருந்து அனுமதிகளைப் பெறுவதில் நிலவும் தாமதங்கள் குறித்து ஆளுநர் எடுத்துரைத்தார்.

ஆளுநர் முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் குறித்துக் கவனம் செலுத்திய சுற்றுலாத்துறை பிரதியமைச்சர், மாகாணத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது தொடர்பிலும் மாவட்ட ரீதியிலான ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு துரிதமாகச் செயற்படுத்துவது என்பது குறித்தும் ஆளுநருடன் விரிவாக ஆராய்ந்தார்.

இந்தக் கலந்துரையாடலில், பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன், ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் தலைவர், ஆளுநரின் பிரத்தியேகச் செய லாளர் மற்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் உள்ளிட்ட பலரும்கலந்து கொண்டனர்.(ம-7,33,104)


காணி விற்பனைக்கு

பொலிகண்டி வீதியில் பொலிகண்டி கந்தவன முருகன் கோயிலில் இருந்து 500m தூரத்தில் 1 பரப்பு 8 குழிநிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 247 7930
076 096 0281

(8200)


## 350 மில்லியன்...

இலங்கை மற்றும் இந்தியா இடையே புதன்கிழமை (05) அன்று பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஸ்ரீவிக்ரம் மிஸ்ரி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பினைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் வலுவான மற்றும் நீண்டகால உறவுகள் குறித்து நீண்ட கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

2022/2023 ஆம் ஆண்டுகளில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஆதரவு, டித்வா அனர்த்தத்தின் போது வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகள் மற்றும் உட்கட்டமைப்பு புனரமைப்புப் பணிகளில் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலுக்கு மத்தியில் நாட்டின் வலுசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்ட பங்களிப்பு ஆகியவற்றை நன்றியுடன் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அதற்காக இந்திய அரசாங்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாட்டுக்கு இந்தியாவின் ஆதரவு அவசியமெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பிராந்திய அச்சுறுத்தலாக மாறியுள்ள சட்ட விரோத போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தால் முகங்கொடுக்க நேரிடும் சவால்களுக்குத் தீர்வு காண்பதில் பிராந்திய நாடுகள் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வகையில் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர், போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு இந்தியாவின் முழுமையான ஆதரவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் தொழில்நுட்பம், வலுசக்தி மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளுக்கு உட்பட்டு இரு நாடுகளுக்கு இடையே நிலவும் ஒத்துழைப்பை இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-7)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசவேல் சரஸ்வதிதேவி



யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல.39, குமார வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசவேல் சரஸ்வதிதேவி அவர்கள் நேற்று (05.08.2026) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனக சுந்தரம் - நாகம்மா தம்பதியரின் மூத்த மகளும் நடராசா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் ஞானேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான சிவானந்தவேல், இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசரத்தினம், இரத்தினசாமி ஆகியோரின் மைத்துனியும் கீர்த்திகா, சுரேக்கா ஆகியோரின் பெரிய தாயும் சந்திரகுமார் - மஞ்சுளா தம்பதியரின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2026) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

077 618 4604, 077 969 8952

(8320)



## மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 05 - 1951



இறப்பு 05 - 08 - 2026

### சுப்பிரமணியம் பாலகுமாரன் (பாலா)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சுந்தரமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலகுமாரன் அவர்கள் நேற்று (05.08.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கலாவாணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தனலக்சுமி மற்றும் சிவகுமாரன், விஜயலக்சுமி(அவுஸ்திரேலியா), ஞானகுமாரன்(அவுஸ்திரேலியா), திருக்குமாரன்(கனடா), அகிலாண்டதேவி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருபாகரன்(U.K), ஜெயவாணி, பிரியதர்சினி(U.K), பிரபாகரன்(U.K) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2026) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.16, உடையார் லேன், கந்தர்மடம்.

(8321)

தகவல்: குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org